# திருமண உரிமங்கள்

திருமண உரிமங்களை இப்போது நேரில் வந்து பெறலாம் அல்லது ஒரு முன்சந்திப்புக்கு பதிவுசெய்து பெறலாம். நகர் மன்ற திருமண பதிவு அலுவலகத்திற்கு வரும் முன்பாக அல்லது முன்சந்திப்பு ஒன்றைப் பதிவுசெய்யும் முன்பாக கீழ்கண்ட அனைத்து தேவைகளையும் பரிசீலிக்கவும்.

குடிமக்களுக்கான திருமண வைபவங்கள் செவ்வாய்க்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை மட்டுமே (சட்டப்பூர்வ விடுமுறை நாட்களைத் தவிர்த்து) அலுவலக நேரங்களில் மட்டுமே நடத்தப்படும். உங்கள் திருமண வைபவத்திற்காக இங்கே பதிவு செய்யுங்கள்.

ஒன்ட்டாரியோ மாகாணத்தில், திருமணம் செய்வதற்கு முன், நீங்கள் திருமண உரிமத்தைப் பெற்றாக வேண்டும். திருமண வைபவம் நடந்து முடிந்த பிறகு திருமண உரிமம் வழங்க முடியாது. ஒன்ட்டாரியோவில் உள்ள பெரும்பாலான நகராட்சி அலுவலகங்களில் இருந்து திருமண உரிமங்களைப் பெறலாம் மற்றும், உரிமம் வழங்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்கு ஒன்ட்டாரியோ மாகாணத்தில் எந்த இடத்திலும் நிகழும் திருமண விழாக்களுக்கும் செல்லுபடியாகும்.

# திருமண உரிமம் பெறுதல்

முன்பதிவு செய்த சந்திப்பு மூலமாக அல்லது நேரில் இருந்து பெறும் சேவை மூலமாக திருமண உரிமங்களைப் பெறலாம் (முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை).

1. **ஆன்லைன் திருமண உரிம விண்ணப்பத்தினை** நிரப்புதல்- உங்களுக்கு ஒரு மேற்கோள் எண் கொடுக்கப்படும், இதனைக் குறித்து வைத்துக்கொள்ளவும்; நீங்கள் நகர்மன்ற அலுவலகத்திற்கு வரும் போது இது உங்களுக்கு அவசியமாகும்.

**அல்லது**

2. காகித வடிவிலான **திருமண உரிம விண்ணப்பத்தினை** அச்சிட்டு, பூர்த்தி செய்து, கையொப்பமிட்டு நகர்மன்ற அலுவலகத்திற்கு கொண்டு வரவும். உங்கள் திருமண

உரிமத்திற்கான [முன்பதிவுக்கான சந்திப்புக்கு] பதிவு செய்யவும் அல்லது நகர் மன்ற அலுவலகத்திற்கு வரும்போது நேரில் செய்துகொள்ளவும்:

- விண்ணப்பதாரர்களில் ஒருவரோ அல்லது இருவருமேயோ வரலாம் மற்றும் இவற்றைக் கொண்டு வரவேண்டும் -
    - கையொப்பமிடப்பட்ட காகித வடிவிலான திருமண விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டால் அது, அல்லது விண்ணப்பம் ஆன்லைனில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தால் அதன் மேற்கோள் எண்
    - இரு தரப்பினருக்கும் இரண்டு அடையாள அட்டைகள் - ஏற்றுக்கொள்ளத்தக்க அடையாள அட்டை பட்டியலை கீழே பார்க்கவும்
    - கனடா நாட்டு விவாகரத்துக்கான அசல் ஆதாரம், பொருந்தினால்
    - வெளிநாட்டு விவாகரத்துக்கான அங்கீகாரம் - ஒன்ட்டாரியோ மாகாணத்தில் பெறப்பட்டிருக்க வேண்டும், பொருந்தினால் - மேலும் தகவல்களுக்கு கீழே பார்க்கவும்

குறிப்பு: அடையாள அட்டை ஆங்கிலத்தில் இல்லை என்றால், அசல் ஆவணங்களுடன் சான்றளிக்கப்பட்ட மொழிபெயர்ப்பு வழங்கப்பட வேண்டும். சான்றளிக்கப்பட்ட மொழிபெயர்ப்பு கனடா நாட்டில் உள்ள பதிவுசெய்யப்பட்ட மொழிபெயர்ப்பு சங்கத்தைச் சேர்ந்த கனடா நாட்டில் சான்றளிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர் மூலம் வழங்கப்பட வேண்டும். ஒன்ட்டாரியோவில், ஒன்ட்டாரியோவின் மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் மொழிபெயர்ப்பாளர்களின் சங்கம் ([Association of Translators and Interpreters of Ontario (ATIO))] என்பது பதிவு செய்யப்பட்ட மொழிபெயர்ப்பு சங்கமாகும்.

## கட்டணம்

$165.00 (HST பொருந்தாது) – டெபிட், கிரெடிட் கார்டுகள் (Visa, MasterCard மற்றும் American Express) மற்றும் ரொக்கம் ஏற்றுக்கொள்ளப்படும். திருமண உரிமக் கட்டணம் திருப்பித் தர முடியாதது.

# அடையாளத்திற்கு தேவையான ஆவணங்கள்

- ஒவ்வொரு விண்ணப்பதாரர் வகையிலும் இரண்டு (2) பிரதிகள் தேவைப்படுகிறது
- அடையாளத்திற்கான (ID) பிரதிகள் இரண்டுமே அசலாக இருக்க வேண்டும் **(புகைப்பட பிரதிகள் மற்றும்/அல்லது சான்றளிக்கப்பட்ட பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)**
- அடையாளத்திற்கான (ID) பிரதிகள் இரண்டுமே காலாவதியாகி இருக்கலாகாது
- அடையாளத்திற்கான (ID) பிரதி ஒன்றில் புகைப்படம் இருக்க வேண்டும்
- அடையாளத்திற்கான (ID) பிரதி ஒன்றில் கையொப்பம் இருக்க வேண்டும்
- அடையாளத்திற்கான (ID) பிரதிகள் இரண்டுமே சட்டப்படியான பெயர் மற்றும் பிறந்த தேதியைக்  கொண்டிருக்க வேண்டும்
- அடையாளத்திற்கான (ID) பிரதிகள் இரண்டிலுமே  முதல் மற்றும் கடைசி பெயர்கள் ஒரே போல இருக்க வேண்டும் (மத்திம பெயர்/பெயர் முதல் எழுத்துக்கள் திருமண உரிமத்தில் இடம் பெற வேண்டுமாயின் அவையும் இருக்க வேண்டும்)
- பொருந்துமாயின் பெயரை மாற்றியதற்கான சான்றிதழையும் இணைக்க வேண்டும்
- அடையாளத்திற்கான (ID) பிரதிகள் அனைத்துமே ஆங்கிலம் மற்றும் ஃப்ரெஞ்சு மொழியில் அல்லது மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு ஒன்ட்டேரியோ மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் வாய்வழி மொழிபெயர்ப்பாளர்கள் சங்கத்தினால் சான்றளிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்

## அடையாளத்திற்கென  ஏற்றுக்கொள்ளத்தக்க படிவங்கள்

- கனடா நாட்டு கடவுச்சீட்டு(பாஸ்போர்ட்) அல்லது கனடா நாட்டு பயண ஆவணம்
- வேறொரு நாட்டின் கடவுச்சீட்டு
- பிறப்பு சான்றிதழ்
- கனடா நாட்டு குடியுரிமை அட்டை அல்லது சான்றிதழ்
- ஓட்டுனர் உரிமம்
- அரசு வழங்கிய புகைப்பட அடையாள (ID) அட்டை
- நிரந்தர குடியிருப்புக்கான அட்டை
- இந்தியர் எனும் தகுதி குறிக்கும் சான்றிதழ் அட்டை
- நெக்ஸஸ் (Nexus) அட்டை

- ராணுவ அடையாளம் (ID)
- புலம் பெயர்ந்து வந்தவர் என்பதற்கான பதிவு
- கனடா நாட்டில் அகதியாக பாதுகாப்பு கோருகின்ற செல்லத்தக்க ஆவணம்

**அடையாளத்திற்கென ஏற்றுக்கொள்ள இயலாத படிவங்கள்**

- சமூகக் காப்பீட்டு அட்டை (SIN)
- சுகாதார அட்டை
- படிப்பதற்கான அனுமதிச்சீட்டு, வேலை செய்வதற்கான அனுமதிச்சீட்டு அல்லது விஸா (VISA)
- மதம் சார்ந்த பிறப்புப் பதிவேடு
- வாக்காளர் அடையாள அட்டை அல்லது ஆவணம்
- மீன்பிடித்தல் அல்லது பிற விளையாட்டு சார்ந்த உரிமம்
- பணியிட அடையாள பெயரட்டை ( ID badge)

# வயது வராதோர்

16 மற்றும் 17 வயது கொண்ட நபர்கள் திருமணம் செய்வது **ஆகாது**. 16 மற்றும் 17 வயது கொண்ட விண்ணப்பதாரர்களுக்கு பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர் ஒப்புதல் தேவைப்படுகிறது. ஒரு ஒப்புதல் படிவம் பெற்றோர் அல்லது பாதுகாப்பாளரால் நிரப்பப்பட்டு மற்றும் கையொப்பமிடப்பட்டு கொடுக்கப்படுவதுடன் உறுதிமொழி எடுக்கும் ஆணையரால் சாட்சியளிக்கப்படவும் வேண்டும். திருமணப் படிவங்களுக்கான பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர் ஒப்புதல் படிவங்கள் எங்கள் அலுவலகத்தில் கிடைக்கப்பெறுகின்றன.

# வாய்வழி மொழிபெயர்ப்பாளர்கள்

உரிமம் வழங்கப்பட இருக்கும் நபர்(கள்) இலகுவாக ஆங்கிலம் பேசவும் படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும்; அப்படியில்லை எனில்,  வாய்வழி மொழிபெயர்ப்பாளர் ஒருவர் உடன் வர வேண்டும். வாய்வழி மொழிபெயர்ப்பாளர் ஒருவரை நியமித்துக்கொள்வது விண்ணப்பதாரரின் பொறுப்பாகும்.  வாய்வழி மொழிபெயர்ப்பாளர்கள் தங்கள் அடையாள அட்டையைக் காண்பித்து உறுதிமொழி படிவம் ஒன்றையும் நிரப்பிக் கொடுக்கவேண்டும். மேலும் தகவல்களுக்கு நகரின் திருமண பதிவு அலுவலர் அலுவலகத்தை தயவு செய்து முன்கூட்டியே தொடர்புகொள்ளவும்.

# விவாகரத்து

## கனடா நாட்டு விவாகரத்து

**விவாகரத்துச் சான்றிதழின் அசல்** அல்லது **நீதிமன்றம் அத்தாட்சி செய்த நகல்** அவசியமாகும். புகைப்பட நகல்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விவாகரத்து வழங்கிய நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்ட அசல், அல்லது நீதிமன்றத்தினால் சான்றளிக்கப்பட்ட பிரதிகள் பெறப்படலாம், மேலும் அவை உங்களுக்கே திருப்பித் தரப்படும். நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட **தீர்ப்பு அல்லது நீதிமன்ற உத்தரவு** (விவாகரத்து உத்தரவு) ஏற்றுக்கொள்ளப்படாது - விவாகரத்து **சான்றிதழே** அவசியமாகும்.

## வெளிநாட்டில் பெறப்பட விவாகரத்து

கனடா நாட்டிற்கு வெளியே, வெளிநாட்டில் பெறப்பட்ட விவாகரத்துக்கு, ஒன்ட்டாரியோ மாகாணத்தில் இருந்து பெறப்பட்ட அங்கீகாரம் தேவை. இந்த செயல்முறைக்கு நான்கு (4) வாரங்கள் வரை ஆகலாம்.

வெளிநாட்டு விவாகரத்து மீதான அங்கீகாரத்தைப் பெற, விண்ணப்பதாரர்கள் பின்வரும் ஆவணங்களை சர்வீஸ் ஒன் ட்டாரியோ (ServiceOntario) வுக்கு சமர்ப்பிக்க வேண்டும்:

- [திருமண உரிமத்திற்கான விண்ணப்ப படிவம்]: பூர்த்தி செய்து கையொப்பமிட்டபடி
- [தனியொருவரின் பொறுப்பு கூறும் வாக்கு மூலம்]: ஒவ்வொரு விவாகரத்துக்கும் (திருமணம் செய்துகொள்ள திட்டமிடும் இரு தரப்பினர்களும் மற்றும் ஒரு சாட்சியும் கையொப்பமிட வேண்டும்.
- **சட்டப்படியான அபிப்பிராயம் கூறும் கடிதம்:** ஒன்ட்டாரியோ மாகாண வழக்கறிஞர் ஒருவரிடமிருந்து, திருமணம் செய்துகொள்ளத் திட்டமிடும் இரு தரப்பினரையும் குறிப்பிட்டு, ஒன்ட்டாரியோவில் இந்த விவாகரத்து அல்லது ரத்தினை ஏன் அங்கீகரிக்க வேண்டும் என்பதற்கான காரணங்களையும் குறிப்பிட்டிருக்க வேண்டும்
- **விவாகரத்து ஆணை அல்லது ரத்து:** ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு மொழியில் அசல் அல்லது நீதிமன்ற சான்றளிக்கப்பட்ட நகலாக இருக்க வேண்டும். ஆணை வேறொரு மொழியில் இருந்தால், மொழிபெயர்க்கப்பட்ட நகல் மற்றும் சான்றளிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளரால் உறுதியளிக்கப்பட்ட உறுதிமொழி ஆகியவை சேர்க்கப்பட வேண்டும்.

இந்த ஆவணங்களை நேரடியாக இந்த முகவரிக்கு அனுப்ப வேண்டும்:

ServiceOntario

Marriage Office

PO Box 4600

189 Red River Road

Thunder Bay ON  P7B 6L8

சர்வீஸ் ஒன்ட்டாரியோ (ServiceOntario) விலிருந்து *திருமணம் செய்துகொள்வதற்கான* இந்த *அங்கீகாரத்தினை* விண்ணப்பதாரர்கள் பெற்ற பின்னரே, அவர்கள் திருமண உரிமத்திற்காக விண்ணப்பிக்க முடியும்.

மேற்கொண்டு தகவல்கள் எங்கள் அலுவலகத்திலும் மற்றும் சர்வீஸ் ஒன்ட்டாரியோ (ServiceOntario) விலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்

# மேற்கொண்டு தகவல்கள்

ஒன்ட்டாரியோவில் திருமணம் செய்துகொள்வது பற்றிய  மேற்கொண்டு தகவல்களுக்கு வருகை தரவும்: சர்வீஸ் ஒன்ட்டாரியோ (ServiceOntario)

மேற்கொண்டு தகவல்களுக்கு, நகரின் திருமண பதிவு அலுவலர் அலுவலகத்தை 905.874.2100 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்

அல்லது marriage.licence@brampton.ca க்கு மின்னஞ்சல் செய்யவும்.